

# எமது தேசத்திற்கும் அதனது மக்களுக்கும் செழுமையைப் பெற்றுத்தர நாம் ஒரு பயணத்தில் இருக்கின்றோம். நீங்கள் அதனொரு பங்காளராக இருக்க விரும்புகிறீர்களா???

இலங்கையின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியானது நாடு முழுவதும் 272 கிளைகள் மற்றும் 3000 இற்கும் மேற்பட்ட திறமையான ஊழியர்களைக் கொண்டு செயற்படுகின்றது என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடத்திற்குத் தேவையான தகைமைகளுடன், சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட தொழில் வல்லுநர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## உதவி முகாமையாளர் – சட்ட அலுவல்கள்

### தொழில் அமைவிடம் - வட மற்றும் வடமத்திய மாகாணம்.

**பிரதான பொறுப்புகள்**

- அடகுப்பத்திரங்களை வரைந்து உறுதிப்படுத்தல் மற்றும் வங்கியின் சார்பில் ஏனைய சட்ட ஆவணங்களை தயாரித்தல் மற்றும் உறுதிப்படுத்தல்
- சட்ட அலுவல்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக வங்கி அதிகாரிகளுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- முகாமைத்துவத்தினால் முன்வைக்கப்படும் விடயங்கள் தொடர்பாக சட்ட நிபுணர்கள் மற்றும் சட்டத்தரணிகள் சபை வழக்கறிஞர்களுடன் கலந்துரையாடுதல்.
- விசாரணைகள், சத்திய கடதாசி மற்றும் மேன்முறையீடுகளை நெறிப்படுத்தல். உரிய நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்தல் மற்றும் வழக்குகளுக்கு ஆஜராகுதல்.
- ஏனைய சகல சட்ட நடவடிக்கைகள்

**அடிப்படைத் தகமைகள்**

- Attorney at law மற்றும் Notary public துறையினைக் கொண்டிருத்தல். சட்டத்துறையில் பட்டம் பெற்றிருத்தல் விஷேட தகுதியாக கருதப்படும். (துறைக்குரிய பட்டப்பின் படிப்பு தகுதிகள் அல்லது தொழில்சார் வங்கியியல்/ நிதியியல் தொடர்பில் தொழில்சார் பரீட்சைகளில் தோற்றியிருத்தல் மேலதிக தகுதிகளாகும்)

  **மற்றும்**

  Attorney at law மற்றும் Notary public தொழில் நடவடிக்கைகளில் ஆகக்குறைந்தது 02 வருட முன்னனுபவம் அல்லது அரச அல்லது தனியார் நிறுவனமொன்றில்/ சட்ட நிறுவனமொன்றில் சட்ட நடவடிக்கைகளில் ஆகக்குறைந்தது 02 வருட முன்னனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். வங்கியொன்றிலோ அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய நிதி நிறுவனமொன்றிலான முன்னனுபவம் விஷேட தகைமைகளாகும்.
- தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 02 மொழிகளுக்குமான நொத்தாரிசு அனுமதிப்பத்திரத்தினை குறித்த நீதிமன்ற வலயத்தில் கொண்டிருத்தல் அவசியம் (சிங்களம் மற்றும் ஆங்கிலம்)
- கணிணி கல்வியறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- 40 வயதிற்குக் குறைவானவராக இருத்தல் வேண்டும்.
- ஆரம்பத்தில் 02 வருட ஒப்பந்த கால நியமனம் வழங்கப்படும்.

**தெரிவு செய்யப்படும் விதம் :**

உரிய தகுதிகள் மற்றும் முன்னனுபவங்களுக்கு இணங்க விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு நேர்முகத் தேர்வுக்கு உட்படுத்தப்படுவர்.

**சம்பளம்**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான சம்பள பொதி தொடர்பில் கலந்தாலோசித்து தீர்மானிக்க முடியும்.

**விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி**
2025 பெப்ரவரி 05ஆம் திகதி

**விண்ணப்பிக்கும் முறை**

இப்பதவி தொடர்பில் ஆர்வம் காட்டும் தகுதியுடைய விண்ணப்பதாரிகளால் கல்வி/ தொழிற் தகைமைச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் சுயவிபரங்களை உள்ளடக்கிய விண்ணப்பப்படிவம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அவ்விண்ணப்பப்படிவத்தில் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் உறவினரல்லாத சிபாரிசு செய்யும் இருவரின் தொடர்பு விபரங்களும் உட்படுத்த வேண்டியதுடன் விண்ணப்பிக்கும் பதவியினை விண்ணப்பப்படிவம் தாங்கிவரும் அஞ்சல் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.

மேல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிராத அல்லது பிழையான தகவல்களை கொண்டிருக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஆட்சேர்ப்பு படிமுறையின் எக்கட்டத்திலும் எவ்வித முன்னறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் அழைப்பதற்கு அல்லது ஒத்திவைப்பதற்கு அல்லது ஆட்சேர்ப்பை இரத்துச் செய்வதற்கு வங்கிக்கு முழுமையான அதிகாரம் உண்டு.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

பிரதான மனிதவள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி.
இல.933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.
0112 03 54 54 | www.rdb.lk